


கழக இளைஞர் அணிச் செயலாளரும் – அமைச்சருமான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று நீட் விலக்கை வலியுறுத்தும் மாபெரும் கையெழுத்து இயக்கத்தில் தலைமையேற்று, இந்திய குடியரசுத் தலைவர் அவர்களுக்கு கையெழுத்திட்டு 'நீட் விலக்கு நம் இலக்கு' பெட்டியிலிட்டார்.

### இன்று நடைபெறுகிறது ! 13 மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்கின்றனர்!

# திருவண்ணாமலையில் - வடக்கு மண்டல வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்!

## முதல்வர் – தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரை!

**திருவண்ணாமலை, அக். 22-**

**வடக்கு மண்டல - கழக வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம், இன்று (22.10.2023 - ஞாயிற்றுக்கிழமை) திருவண்ணாமலையில் மிகுந்த எழுச்சியுடன் நடைபெறுகிறது.**

**முதல்வர் - கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள், இப்பயிற்சிப் பாசறைக் கூட்டத்திற்குத் தலைமையேற்று, கூட்டத்தின் நிறைவில் சிறப்புரையாற்றுகிறார்.**

**இம்மாபெரும் பயிற்சிப் பாசறைக்கு - கழக உயர் நிலை செயல் திட்டக்குழு உறுப்பினரும், திருவண்ணாமலை தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், பொதுப்பணி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சருமான எ.வ.வேலு, சிறப்பான ஏற்பாடுகளைச் செய்து வருகிறார்.**

கழகத் தலைவர் அவர்களின் அறிவுரையின்படி சரிபார்க்கப்பட்ட வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்களுக்கென "வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் (BLA2) ஒரு நாள் பயிற்சிப் பாசறைக் கூட்டம்" நடத்திட முடிவெடுக்கப்பட்டு, கடந்த ஜூலை 26, ஆகஸ்ட் 17 மற்றும் செப்டம்பர் 24 ஆகிய நாட்களில் திருச்சி, இராமநாதபுரம் மற்றும் காங்கேயத்தில் – முறையே டெல்டா, தென் மற்றும் மேற்கு மண்டல வாக்குச்சாவடி பொறுப்பாளர்கள் பயிற்சிப் பாசறைக் கூட்டம் வெற்றிகரமாக நடைபெற்று முடிந்தது.

அதனைத் தொடர்ந்து, வடக்கு மண்டலத்திற்குட்பட்ட மாவட்டங்களின் "வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA2) பயிற்சி பாசறைக் கூட்டம்" இன்று (அக்டோபர் 22 – ஞாயிற்றுக் கிழமை) திருவண்ணாமலை மாவட்டம் – 606611, திருவண்ணாமலை ஒன்றியம், மலப்பாம்பாடி ஊராட்சியில் உள்ள அருணாச்சலம் நகரில் அமைந்துள்ள "கலைஞர் திடலில்", முதலமைச்சர் – கழகத் தலைவர் அவர்கள் சிறப்புரையாற்றிட நடைபெற உள்ளது.

**13 மாவட்டங்களின் – வாக்குச் சாவடிப் பொறுப்பாளர்கள் பங்கேற்பு!**

வடக்கு மண்டலத்துக்கு உட்பட்ட கீழே குறிப்பிட்டுள்ள 13 கழக மாவட்டங்களின் மாவட்டக் கழகச் செயலாளர்கள், தமது மாவட்டங்களுக்குட்பட்ட 'வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA2) கூட்டத்தை' கூட்டி, இப்பயிற்சி பாசறைக் கூட்டத்தின் அவசியத்தை எடுத்துரைத்து, தங்களது மாவட்டத்துக்கு உட்பட்ட வாக்குச்சாவடிப் பொறுப்பாளர்கள் (BLA 2) அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாமல் கலந்து கொள்ள உரிய ஏற்பாடுகளைச் செய்திட வேண்டுமென தலைமைக் கழகம் கேட்டுக் கொண்டுள்ளது.

இந்தப் பயிற்சிப் பாசறையில் பங்கேற்கும் மாவட்டங்கள் விபரம் வருமாறு:-

1. திருவண்ணாமலை வடக்கு
2. திருவண்ணாமலை தெற்கு
3. தர்மபுரி கிழக்கு
4. தர்மபுரி மேற்கு
5. கள்ளக்குறிச்சி வடக்கு
6. கள்ளக்குறிச்சி தெற்கு
7. கிருஷ்ணகிரி கிழக்கு
8. கிருஷ்ணகிரி மேற்கு
9. திருப்பத்தூர்
10. இராணிப்பேட்டை
11. வேலூர்
12. விழுப்புரம் வடக்கு
13. விழுப்புரம் தெற்கு

# சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே; திராவிட மாடல் ஆட்சியை திராவக மாடல் ஆட்சி என்று குறிப்பிட்டு அறிக்கை வெளியிட்டுள்ளாரே; எடப்பாடி பழனிச்சாமி!

**பெரியதம்பி :** **ஆமாம்பா; அம்மா நடத்திய அ.தி.மு.க. ஆட்சி காலத்தில்தானே, ஐ.ஏ.எஸ். அதிகாரி சந்திரலேகா, கோட்டைக்குப் போகும் வழியில் பட்டப்பகலிலே அவருடைய முகத்திலே திராவகம் வீசப்பட்டு அது பரபரப்பான செய்தியாக மட்டுமல்ல; அதன் பின்னணி இரகசியங்கள் எல்லாம் பக்கம் பக்கமாக ஏடுகளில் வெளிவந்தனவே !**

**அந்த அளவுக்கு திராவக ஆட்சி மட்டுமல்ல; ஹெராயின், கஞ்சா, குட்கா மாடல் ஆட்சி எல்லாம் நடத்திய ஆட்சியல்லவா அ.தி.மு.க. ஆட்சி. அதனால் தான் எடப்பாடிக்கு எல்லாமே அப்படித் தோன்றுகிறது போலும்!**

### மனிதர்களை விண்ணுக்கு அனுப்பும்

# ககன்யான் மாதிரி விண்கலம் விண்ணில் பாய்ந்தது!

*ஸ்ரீஹரிகோட்டா, அக். 22-* ரஷியா, அமெரிக்கா, சீனா ஆகிய நாடுகளைத் தொடர்ந்து விண்ணுக்கு மனிதனை அனுப்பும் முயற்சியில் இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ தீவிரமாகச் செயல்பட்டு வருகிறது.

ககன்யான் திட்டத்தின் முதற்கட்ட சோதனையாக மாதிரி விண்கலம் TV D1 ராக்கெட் மூலம் விண்ணில் பாய்ந்தது. ஸ்ரீ ஹரி கோட்டா வில் உள்ள முதல் ஏவுதளத்தில் இருந்து மாதிரி விண்கலம் ஏவப்பட்டு விண்ணில் பாய்ந்தது. மாதிரி விண்கலத்தை தரையிலிருந்து 16.6கிமீ தூரம் அனுப்பி வங்கக்கடலில் இறக்கப்பட்டு சோதனை நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2025ல் விண்ணிற்கு 3 வீரர்களை இந்தியா அனுப்புகிறது. ரஷ்யா, அமெரிக்கா, சீனாவை தொடர்ந்து இந்தியாவும் முயற்சி மேற்கொண்டுள்ளது.




